

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 07.09.2026

# ஆளத் தெரியாதவருக்கு தலைமைச் செயலகம் எதற்கு?

**ரூ.1200** கோடியில் புதிய தலைமைச் செயலகம் கட்டப் போகிறாராம் முதலமைச்சர் விஜய். **‘அறுக்கத் தெரியாதவர் இடுப்பில் 52 கத்தி எதற்கு?’** என்று ஒரு பழமொழி உண்டு. அதுதான் நினைவுக்கு வருகிறது.

விஜய் முதலமைச்சராகப் பதவிக்கு வந்து 100 நாட்களைக் கடந்து விட்டது. அவரை யாராவது முதலமைச்சராக நினைக்கிறார்களா? அவர்களது கட்சிக்காரர்களே நினைக்கிறார்களா? அவரை இன்னமும் ஹீரோவாகத்தான் நினைக்கிறார்களே தவிர முதலமைச்சராக நினைக்கவில்லை.

அல்லது விஜய்க்காவது தான் ஒரு முதலமைச்சர் என்ற நினைப்பு இருக்கிறதா? அப்படி நடந்து கொள்கிறாரா? இல்லை.

**அவரைப் பற்றி நிர்வாக ரீதியாக ஏதாவது தகவல் வருகிறதா? இல்லை. இன்று கோட் போட்டார், இன்று வேட்டி கட்டினார், வெள்ளிக்கிழமை எல்லாம் வேட்டி கட்டுகிறார், கண்ணாடி போட்டார், படியில் வேகமாக இறங்கினார், பேண் லூப்பில் விரலை விட்டு நின்றார்... இவைதான் முதலமைச்சராக ஆனபிறகு அவரைப் பற்றி டிரெண்ட் ஆன செய்திகள். இதனால் துளி நன்மையாவது நாட்டுக்கு உண்டா?**

சொன்ன வாக்குறுதிகளை, சொன்ன மாதிரி நிறைவேற்றினாரா? இல்லை. சொன்னது ஒன்று, செய்வது ஒன்று என்பதுதான் அவரது பாணியாக இருக்கிறது.

‘தானும் செய்ய மாட்டார், அடுத்தவரையும் செய்ய விடமாட்டார்’ என்பதைப் போலத் தான் நடந்து கொள்கிறார். தி.மு.க. ஆட்சியில் கொண்டு வந்த திட்டங்களை நிறுத்தினார்.

திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களுக்கு பெயரை மாற்றினார். ‘வெற்றி’ என்ற தனது கட்சி ஸ்டிக்கரை ஒட்டினார்.

**அவர் கையில் போலீஸ் துறை இருக்கிறது. நாட்டில் நடக்கும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை எதற்கும் அவர் சபையில் பதில் சொன்னது இல்லை. மவுனமாகவே இருக்கிறார். வேறு அமைச்சர்களை வைத்து பதில் சொல்ல வைக்கிறார்.**

**அவர் கையில் நகராட்சி நிர்வாகத் துறை இருக்கிறது. அது தொடர்பாகவும் எதுவும் பேசுவது இல்லை சபையில். அந்தத் துறை தொடர்பான மானியக் கோரிக்கை மீது விவாதம் நடந்தது. அதில் அவர் பங்கேற்கவும் இல்லை. பதில் சொல்லவும் இல்லை. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன்தான் பதில் சொன்னார். இதுதான் விஜய்யின் லட்சணம் ஆகும்.**

சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. போலீஸ் துறையை வைத்திருக்கும் விஜய், போஸ் கொடுத்துக் கொண்டு இருக்கிறார். சினிமாவிலாவது போலீஸ் கடைசியில் வந்துவிடும். ஆனால் விஜய் போலீஸ் வருவதே இல்லை.

பல்வேறு குற்றங்களில் த.வெ.க. நிர்வாகிகளே ஈடுபடுகிறார்கள். அதைத் தடுக்க தைரியம் இல்லாதவராக, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முதுகெலும்பு அற்றவராக இருக்கிறார் முதலமைச்சர்.

**ஸ்ரீவைகுண்டம் த.வெ.க. எம்.எல்.ஏ. சரவணன் மீது விஜய் ரசிகை ஒருவரே பாலியல் புகார் சொன்னார். அந்த சரவணன் மீது நடவடிக்கை இல்லை. அந்தப் பெண்ணை கட்சியை விட்டு நீக்கினார் விஜய். இதுதான் அவரது நீதிபரிபாலனம்.**

**‘அரசு வக்கீல் நியமனத்துக்கு பணம் வாங்குகிறார்கள்’ என்று அவரது கட்சியைச் சேர்ந்த பெண் வழக்கறிஞரே புகார் கூறினார். அவரைக் கட்சி விட்டு நீக்கினார் விஜய். இதுதான் அந்த தூய சக்தியின் உண்மையான குணம்.**

100 நாளில் 100 விதமான ஊழல் முறைகேடுகள் நடந்துள்ளது. இதனை புலனாய்வு பத்திரிக்கைகள், சமூக ஊடகங்கள் எழுதி வருகின்றன. இவை எதற்கும் இந்த ஆட்சியாளர்களால் இதுவரை பதில் இல்லை.

முதலமைச்சரின் அறையை உருவாக்க விடப்பட்ட டெண்டரில் எத்தனை விதமான ஊழல்கள்? டெண்டர் விடுவதற்கு முன்னால் அறைக்குள் வேலைகள் நடக்கிறது. குறிப்பிட்ட தொகையை விட 37 விழுக்காடு குறைவாக ஒருவர் டெண்டர் தொகை குறிப்பிடுகிறார். இதெல்லாம் ‘விஜய் ஃபார்முலா’ ஆகும்.

ஒரு நகை நிறுவனம், ஒரு ரூபாய் போட்டுக் கொண்டு, கோடிக்கணக்கான மதிப்பிலான டெண்டரை தூக்குகிறது. அந்த நிறுவனத்தின் விளம்பரத்தில் விஜய் ஒரு காலத்தில் நடித்துள்ளார். இதெல்லாம் ‘டான்சி’யை விட மிக மோசமான மோசடியல்லவா?

**‘ஜான் ஆரோக்கியசாமி, ஜெகதீஷ் பழனிசாமி, விஷ்ணு ரெட்டி ஆகிய மூவர் தான் அதிகாரிகளிடம் பேசுகிறார்கள். அவர்கள்தான் ஆட்சி நடத்துகிறார்கள்’ என்று புலனாய்வு பத்திரிக்கைகள் எழுதி வருகின்றன. ‘நான் ஒருவன் தான் பவர் சென்டர்’ என்று சொன்னவர் பவர் இல்லாமல் இருப்பதைத்தான் இது காட்டுகிறது.**

‘கில்லி’ சரத்குமார் என்று சொல்லிக் கொள்ளும் அமைச்சர் உண்மையில் ‘பவுடர்’ சரத்குமாராக இருந்துள்ளார். அவர் ‘பவுடர்’ எடுப்பது வீடியோவாக வந்தது. அதன் பிறகும் அவரை அமைச்சராக வைத்துக் கொண்டுள்ளார் விஜய். இதை விட ஆணவம் வேறு இருக்க முடியாது. சரத்குமார் மீது நடவடிக்கை எடுத்தால் தனது நாற்காலி ஆடும் என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை.

இப்படித்தான் பல அமைச்சர்கள் தப்பி இருக்கிறார்கள். பலர் மீதும் பல்வேறு குற்றச்சாட்டுகள் வந்துவிட்டது. அவர்கள்தான் தனது நாற்காலியைக் காப்பாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். அதனால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார் விஜய்.

கொள்கைத் தலைவராக பெரியாரை அறிவித்தவர் ஆட்சியில், கட்சியில் நடப்பது அனைத்தையும் நான்தான் முடிவு செய்கிறேன் என்கிறார் ஜோசியர் ஒருவர். அவர் ஜெயலலிதாவை எவ்வளவு ஏமாற்றினார் என்பதும், அவர் எப்படி விரட்டினார் என்பதும் போயஸ் கார்டனை அறிந்தவர்கள் அறிவார்கள்.

கொள்கைத் தலைவராக அம்பேத்கரை அறிவித்தவர் ஆட்சியில், அம்பேத்கர் பெயர் நீக்கப்படுகிறது. ஆதி திராவிடர் என்ற அடையாளச் சொல்லையே காவு வாங்கிவிட்டார் விஜய். பட்டியலின மாணவர் வெளிநாடு சென்று படிக்க வழங்கப்படும் நிதியில் கை வைத்துவிட்டார். ஆதிதிராவிடர் நலத் துறை சார்பிலான நிதிகள் மற்ற துறைக்கு மடைமாற்றம் செய்யப்படுவதை பேராசிரியர் ஒருவர் ஆதாரத்துடன் அம்பலப்படுத்தியதற்கு இதுவரை பதில் இல்லை.

**ஒருவருக்கு வோட்டுப் போட்டு, அவருக்கு வாக்களித்தது தவறு என்று ஒரு மாத காலத்துக்குள் மக்கள் சொன்னதுதான் விஜய் வாங்கிய பட்டம் ஆகும். இதை வேண்டுமானால் அவர் சட்டையில் எழுதி வைத்துக் கொள்ளலாம்.**

**கதையே தெரியாமல் படம் எடுப்பதைப் போல, தினந்தோறும் எதையோ உருட்டிக் கொண்டு இருப்பவருக்கு எதற்காக ரூ.1200 கோடியில் தலைமைச் செயலகம்?**

**பழிவாங்குவது ஒன்றைத் தான் விஜய் இதுவரை செய்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி கைது, அனிதா ராதாகிருஷ்ணன் கைது, மார்க்கண்டேயன் கைது, தன்னை விமர்சித்து சமூக வலைத்தளத்தில் எழுதுபவர்கள் கைது, முன்னாள் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, செந்தில்பாலாஜி வீட்டில் ரெய்டு.. இது மட்டும்தான் நடக்கிறது. இதைச் செய்வதற்கு ரூ.1200 கோடியில் தலைமைச் செயலகம் எதற்கு? ஒரு கோடியில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் கட்டி அதன் வாசலில் பட்டு வேஷ்டி சட்டை போட்டுக் கொண்டு ‘ஜனநாயகன்’ படத்தில் ரத்தம் வடிய வைத்திருக்கும் கருவியை வைத்திருந்தால் போதுமே?**



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம், திருமலை திருப்பதி தேவஸ்தான முன்னாள் அறங்காவலர் குழு உறுப்பினர் ஜெ.சேகர் (எ) சேகர் ரெட்டி இல்லத் திருமண வரவேற்பு விழாவில் பங்கேற்று மணமக்கள் எஸ்.பாக்யஸ்ரீ – எஸ்.அஷ்ரித் வட்சல் ரெட்டி ஆகியோரை வாழ்த்தினார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன், முன்னாள் எம்.எல்.ஏ., இ.பரந்தாமன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உடன் உள்ளனர்.

## எதிர்க்கட்சித் தலைவரின் குற்றச்சாட்டுகளுக்கு
# திசைதிருப்பாமல் - குட்டிக் கதைச் சொல்லாமல் இன்று முதல்வர் பதிலளிப்பாரா?



**சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 3.9.2026 அன்று எழுப்பிய குற்றச்சாட்டுகளுக்கு இன்று பதிலுரை வழங்கும் முதல்வர் விஜய் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டது போல கவனத் திருப்பலோ (Diversion), பழி போடுகிற தந்திரங்களோ (Tactics) இல்லாமல், வெறும் ‘ரீல்ஸ்’ கருத்தாக இல்லாமல், சம்பந்தமே இல்லாமல் - லாஜிக்கே இல்லாத குட்டிக் கதைகள் சொல்லாமல், எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய மக்களின் கேள்விகளுக்கு நேரடியாக பதில் சொல்வாரா? என்று பார்ப்போம்!**

# மெட்ராஸ் ஸ்டேட் என்றிருந்ததை ‘தமிழ்நாடு’ என்று பெயர் மாற்றி வரலாற்று சாதனை படைத்தவர் பேரறிஞர் அண்ணா!

## சட்டமன்றத்தில் தி.மு.க. கொறடா எ.வ.வேலு பேச்சு!

**சென்னை, செப்.7 – சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் கொண்டு வந்த “வழக்காடு மொழியாக தமிழுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் எனும் ஒன்றிய அரசை வலியுறுத்தும்” தனித் தீர்மானம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய கழகக் கொறடா எ. வ.வேலு அவர்கள், “ நமது தமிழ் நாட்டுக்கு தமிழ்நாடு எனப் பெயர் சூட்டியது திராவிட முன்னேற்றக் கழகமும் பேரறிஞர் அண்ணா அவர்களும் தான்!” என்று ஆணித்தரமாகக் குறிப்பிட்டார்.**



சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சரால் கொண்டு வரப்பட்ட இந்தத் தனித் தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக முழுமனதோடு நாங்கள் வரவேற்கிறோம். அதில் ஒன்றும் மாற்றம் இல்லை.

நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னால், ‘சென்னை ராஜஸ்தானி’ என்றுதான் இருந்தது. அப்பொழுது கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு, பக்கத்தில்இருக்கிற முழு ஆந்திரா, ஒரிசா மாநிலத்தின் ஒரு சில பகுதிகள் ஆகியவைதான், அப்போது ‘சென்னைராஜஸ்தானி’ என்று இருந்தது. அதற்குப் பிறகு, மொழிவாரி மாநிலமாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையைஒன்றிய அரசாங்கத்தில் வைத்தபொழுது, கன்னடம் பேசுகிற பகுதிகளையெல்லாம் கர்நாடகா என்றும், மலையாளம் பேசுகிற பகுதிகளை கேரளா என்றும், ஒரியா பேசுகிற பகுதிகளை அங்கே சேர்த்து விட்டு, தெலுங்கு பேசுகிற இடங்களை ஆந்திரா என்றும், தமிழ்நாட்டை தமிழ் நாடு என்றும் அப்போதுகூடவரவில்லை. அப்போதுகூட என்னவென்றால், MADRAS STATE என்று ஆங்கிலத்தில் சொன்னார்கள்.அதே நேரத்தில், மெட்ராஸ் மாநிலம்என்றுதான் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

அதற்குப் பிறகுதான், பேரறிஞர் அண்ணாஅவர்கள் 1967ல் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே, இதே மாமன்றத்தில் ‘நான் சட்டத்தை நிறைவேற்றிவிட்டு, தமிழ்நாடு, தமிழ்நாடு, தமிழ்நாடு என்று மூன்று முறை சொல்வேன், நீங்கள் வாழ்க! வாழ்க! வாழ்க!’ என்று ஒட்டுமொத்தமாகச் சொல்ல வேண்டும் என்று சொல்லி, இந்த மாமன்றத்தில் பேரறிஞர் அண்ணாஅவர்கள்தான் தமிழ்நாடு என்று பெயர் வைத்தார்கள். அதிலிருந்து, தமிழ்நாடு என்று பெயர்வைக்கவேண்டும் என்றுதான் ஒவ்வொரு தமிழருடைய எண்ணமும் இருக்கிறது. எனவே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தில், ‘தமிழ்நாடு’ என்று இணைத்தால்இன்னும் சிறப்பாக இருக்கும் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்து, இதுஒன்று.

இங்கே பேசுகிறபோது நம்முடைய மாண்புமிகுஅமைச்சர் அவர்கள், இது வரலாறு என்று சொன்னார்கள். பொதுவாக, இந்த மாமன்றத்தில், நாம்தீர்மானங்களை நிறைவேற்றுகிறோம், சட்டங்களை நிறைவேற்று கிறோம். ஆனால், சில சட்டங்கள்முழுமையடைந்தால் நாமே ஆணை பிறப்பிப்பதில்லை. இங்கிருந்து ஆளுநருக்கு அனுப்புகிறோம். ஆளுநரின்பரிந்துரையின்பேரில் குடியரசுத் தலைவருக்குப் போகிறது. குடியரசுத் தலைவரின் ஒப்புதலோடுவருகிற போது, அது சட்டமாக மாறுகிறது. இது நீதிமன்றம் சம்பந்தப்பட்டதாக இருக்கிற காரணத்தினால், குடியரசுத் தலைவர்கள் உச்ச நீதிமன்றத்திற்குத்தான் அனுப்புகிறார்கள். அப்படித்தான்உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, சில நேரங்களில் அது தடையைப் பெற்றது.

அதனால், இப்போது நாம் தீர்மானமாக நிறைவேற்றினாலும்கூட, இதனைக் கோரிக்கையாகத்தான் வைக்க முடியும். ஆளுநர் மூலமாக அல்லது குடியரசுத் தலைவர்மூலமாக அல்லது உச்ச நீதிமன்றம் சென்றால் தான் இது முழுமையடையும். அப்படியென்றால், அவ்வாறுமுடிந்தால்தான் இது வரலாறாக இருக்கும். நாங்கள் இப்போது வரலாறு வேண்டாமென்று சொல்லவில்லை.இதை உங்களுடைய ஆட்சிக் காலத்தில் கொண்டுவந்தால், வரலாறு என்று சொல்லலாம். அதில் ஒன்றும்தவறு இல்லை. இப்பொழுது வரலாறாக இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. இது கோரிக்கைதான். அதனால், இதில் ‘தமிழ்நாடு’ என்பதை இணைத்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

இவ்வாறு அவர் பேசினார்.

## முரசொலி கணினி பிரிவில் பணிபுரியும்
# க.விக்னேஷ் சகோதரி க.சுபலட்சுமி - ரா.சதீஷ் திருமண விழா!
## செங்கல்பட்டு – மாமண்டூரில் நடைபெறுகிறது! ஊழியர்கள் – நண்பர்கள் வாழ்த்துகின்றனர்!

சென்னை, செப்.7

கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்- கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் வாழ்த்துக்களுடன் சென்னை சைதாப்பேட்டை, 170 அ வட்டம் களிகுன்றத்தில் வசிக்கும் பா. கபாலி - க. மாரியம்மாள் ஆகியோர் மகளும், முரசொலி செய்தித்தாளில் கணினி பிரிவில் பணிபுரியும் க.விக்னேஷ் சகோதரி க.சுபலட்சுமி - செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம் படாளம் கிராமத்தில் வசிக்கும் எம்.ராஜேந்திரன் - ஆர்.கன்னியம்மாள் ஆகியோரின் இளைய மகனுமான ஆர். சதீஷ் ஆகியோர் திருமண விழா இன்று (7.9.2026), திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு படாளத்தில் அமைந்துள்ள C.S.I அடைக்கல நாதர் ஆலயத்தில் படாளம் புலிப் புரகோவில் குருசேர ஆயர். அருட்பணி எம்.தீபக்ராஜ் அவர்கள், வண்டலூர் குருசேர ஆயர். அருட்பணி பி.சாமுவேல் அன்பரசு அவர்கள், படாளம் சபை ஊழியர் டி.பிரபுராஜ் அவர்கள், மிஷ்னரி லாசர் அவர்கள், மற்றும் களிக்குன்றம் ஆயர். அருட்பணி எம்.ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலையில் நடத்தப்படும், தூய திருமணத்திற்கும் அதன் பின் மாலை 6.30 மணிக்கு மேல் (GST.சாலை ஆற்றங்கரை) மாமண்டூரில் அமைந்துள்ள C.S.K A/C மஹாலில் திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.



இதில் ஆர். ராஜேஷ் - திருமதி எஸ்.சரளா, ஆர்.நந்தினி, ஆர். இனியா ஆர்.மித்ரன் மற்றும் களிக்குன்றம் - படாளம் நண்பர்கள், உறவினர்கள், முரசொலி ஊழியர்கள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்கின்றனர்.